[illegible]

[illegible] 193

7L
15ஜ 211, N33
N37.5.3
190251

வருடச் சந்தா ரூ. 1. மலர் 5. இதழ் 3. [செப்டம்பர் 1937.

# ஆரம்பக்கல்வி
# ELEMENTARY EDUCATION

"ஆரம்பக் கல்வி"யின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஓர் மாதாந்திரப் பத்திரிகை.

EDITOR.
P. VEERARAGHAVAN (Member, Madras District Educational Council)

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

## ஆசிரிய மானேஜர்கள் 5-வது மகாநாடு.

—0—

சென்னையில் அக்டோபர் 9,10-ம்தேதிகளில் மேற்குறித்த மகாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முன் நடந்த மகாநாடுகளைப் போலல்லாமல் இந்த மகா நாட்டில், வரவேற்புத் தலைவரின் பேருரை, தலைவரவர்களின் பேருரை, ஆரம்பக் கல்வி உலகில் புது உணர்ச்சியையும், கல்வி யதிகாரிகளினிடையே பரபரப்பையும்உண்டாக்கியிருக்கிறது. வரவேற்பு கமிட்டித்தலைவரின் சொற்பொழிவு, முழுதும் இப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. வாசகர்கள் நிதானமாகப் படித்து அபிப்பிராய பேதங்கள் ஏதாவது இருப்பின் அதை சுருக்கமாக எழுதி இப் பத்திரிகை ஆசிரியருக்கு அனு[illegible]கவும். மகா நாட்டின் தலைவர் திரு. [illegible]டேசய்யரின் சொற்பொழிவு [illegible]சமாக இப் பத்திரிகையில் [illegible]த மொழி பெயர்த்துப்

இம் மகநாட்டில் வரவேற்புக் கமிட்டித்தலைவரின் பேருரையும் மகா நாட்டின் தலைவரின் சொற்பொழிவும், எல்லா விஷயங்களிலும் முரண்படாமல் ஒத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. கல்வி யதிகாரிகளைக் குறைக்க வேண்டு மென்பதும், "டிரெயினிங் பாடசாலைகளை எடுத்துவிட வேண்டு மென்பதும் இவர்களின் முக்கிய பிரச்னைகள்.

முக்கியமாக [Director of puplic Instruction.] கல்வி இலாகா தலைவரான டைரக்டர் பதவி அனுவசியமென்பது" இவர்கள்கொள்கை. இவ்விதம் இவர்கள் கூறியது, பத்திரிகைகளில் வெளிவந்தபொழுது கல்வியதிகாரிகளிடத்தில் ஒரு வித பரபரப்பும், ஆவேசமும் காணப்பட்டதாக தெரிகிறது. கல்வி இலாகாவிலுள்ள சில நண்பர்கள் இதைப்பற்றி தப்பு அபிப்பிராயம் கொண்டதாகவும் தெரியவருகிறது. ஆதலின் [illegible]தை இங்குவிளக்கவேண்டியது அவசியமென [illegible] நினைக்கின்றோம்.

52
T15ம 211,833
N37.5.3
190351

முதலில் ஆரம்பப் பாடசாலைகளைக் கண்காணிப்பவர்கள் டிப்டி இன்ஸ்பெக்டர் சகோதரர்கள். இவர்கள் இப் பாடசாலை சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் பூர்த்தி செய்து விடுகிறார்கள். இவர்களுக்கு மேலுள்ளவர்கள் ஜில்லாக் கல்வியதிகாரிகள். இவர்கள் செக்கண்டரி உயர்தர பாடசாலைகளை பரீட்சை செய்து மற்ற எல்லா விஷயங்களையும் பூர்த்தி செய்து விடுகிறார்கள். பிறதுள்ளவர்கள் 4 டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள், டிப்டி டைரக்டர்கள், டைரக்டர் அவர்கள். இவர்களுக்கு என்ன வேலையென்பது நமது கேள்வி. இந்த ஜில்லாக் கல்வி யதிகாரிகளையும், டிப்டி இன்ஸ்பெக்டர்கள், ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர்கள் செய்யும்வேலைகளையும் மேற்பார்வை பார்த்து கண்காணித்து வருவதற்கு 500 ரூபாய் சம்பளமுள்ள ஒரு கல்வியதிகாரி போதுமானது.

ஆனால் தற்போது மேற் சொல்லியபடி 6 ஜில்லாக்களுக்கு ஒரு கல்வி யதிகாரியாக (Divisional Inspector of Schools.) 4 கல்வி யதிகாரிகளை ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். இக் கல்வி யதிகாரிகளுக்கு தற்போது வகித்து வரும் டைரக்டர் தன் எல்லா அதிகாரத்தையும் இந்த டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுத்து விட்டதாகத்தெரியவருகிறது. இவர்கள் செய்யும் தீர்மானங்களே முடிவானதாகத் தெரியவருகிறது. இந்த நிலையில் டெப்டி டைரக்டர்களுக்கு என்ன வேலை யிருக்கின்றதென்பது நமது கேள்வி. பணமுடையான இக்காலத்தில் பொது மக்களின் பணத்தை அனாவசியமாக கல்வியதிகாரிகளுக்கென செலவழிப்பது சரியான முறையல்லவென்பது இவர்களது அபிப்பிராயம். ஒன்று டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களாவது நீக்கப்பட வேண்டும். அல்லது டைரக்டர்களையாவது நீக்கப்படவேண்டுமென்பது இவர்களது கருத்து. டைரக்டர் இல்லாமற்படிக்கு டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள், [ Secretary to Governm[illegible] Education [illegible]rtment. ] இக் கல்[illegible]க் கொண்[illegible] கல்வி மந்திரியின் மேற்பா[illegible]யில் கல்வியிலாகாவை பரிபாலித்து வரலாமென்பது இவர்கள் கொள்கை. இக்கொள்கையை ஆதரித்துதான், Dr. Arundalo President Theosophical Society.] அடையார் தியசாபிகல் சொஸைடியின் தலைவர் திரு. அருண்டேல் துரையவர்கள் இம் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டி தலைவரையும், தலைவரையும், பெரிதும்பாராட்டி அக்டோபர் மாதம் 13-ம்தேதி இந்து பத்திரிகையில் விரிவாக எழுதியிருக்கின்றார். அதை ஆங்கிலத்தில் அப்படியே பிரசுரித்திருக்கின்றோம். அதன்சாரம்சம் பின் வருமாறு:—



திரு. பி. வீரராகவன் அவர்கள்
(ஆரம்பக் கல்வி பத்திரிகாசிரியர்.)

“சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் 5-வது மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டி அக்ராசனரும், தலைவரும், அருமையாகவும்வெளிப்படையாகவும், பேசிய வார்த்தைகளுக்கு, இம் மகாநாட்டை நான் மிகவும் பாராட்டுகின்றேன் கல்வி இலாகா டைரக்டர் ஆசிரியர்களைக் குறை கூறியதைப்பற்றி கண்டித்திருப்பது மிகவும் சரியானதாகும். சில நாட்களுக்கு முன்பு இந்த மன்னிக்க முடியாததும், அவமரியாதையாயு



முள்ள, டைரக்டர் கூறியவார்த்தைகளைக்கனம் கல்வி மந்திரியார் டைரக்டருக்கு எடுத்துக் காட்டுவார் என்ற, எண்ணத்துடன் எழுதியிருந்தேன். கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில் தான் திரு. ஸ்டாத்தம் துரையவர்களைக் கேம்பிரிட்ஜ் கலாசாலையில் தான் படித்த நாள் முதல் தெரியுமென்கிறார். ஆதலின் இவர்களுடைய உறவு மந்திரி என்ற முறையிலும், டைரக்டர் என்ற முறையிலும், எந்த நிலைமையிலிருக்கின்றதென்பது அறிய மிகக் கஷ்டமாயிருக்கின்றது. கனம் கல்வி மந்திரியின்கீழ் திரு. ஸ்டாத்தம் டைரக்டராக யிருக்கின்றாரா, அல்லது திரு. ஸ்டாத்துரையே கல்வி மந்திரிக்கு மேல் மந்திரியாக யிருக்கின்றாரா என்பது விளங்கவில்லை. ஆனால் இம் மகாநாட்டுக்கு திரு. வார்க்கி பேசும் பொழுது இடைக்கால மந்திரிகாலத்தில் வெளியிடப்பட்ட அரசாங்கக் கல்விச்சீர்த் திருத்தத்தைபற்றிய அறிக்கை, இடைகால மந்திரிகள் செய்திருந்தால் அதைப் புதைத்திருப்போம், ஆனால் அது கல்வி இலாகா டைரக்டர் திரு. ஸ்டாத்தம் துரையவர்களால் செய்யப்பட்ட வேலையானதால் புதைக்கப்படவில்லை யென்று கூறினார். ஆதலின் தற்போது மந்திரியை காட்டிலும் டைரக்டர் துரையே பிரதானமானவரென்ற உண்மை தற்போது விளங்குகின்றது.

திரு. வார்க்கி அவர்கள் பேசிய வார்த்தைகள் அனைத்தும் ஓர்சர்வாதிகாரிபேசுவதுபோல் காணப்படுகிறது. ஆனால் தற் காலத்தில் சர்வாதிகாரிகளுக்குநம்நாட்டில்இடங்கிடையாது. நமக்கும் சர்வாதிகாரிகளைப்போல பேசஇடமுண்டு. ஆனால் இதைப்பற்றி வரவேற்புக் கமிட்டித்தலைவரும், மகாநாட்டின் தலைவரும் தீவிரமாக பேசியிருக்கின்றார்கள். இருவரும் கல்வியிலாகா அதிகாரி டைரக்டர் பதவியை மந்திரியார் எடுத்து விடவேண்டுமென்ற யோசனை கூறியிருப்பதைப் படிக்க நான் சந்தோஷப்படுகின்றேன். எவ்வளவு குறைக்கமுடியுமா அவ்வளவுக்கு கல்வியிலாகா கண் காணிக்கும் அதிகாரிகளைக் குறைக்கவேண்டுமென்ற அபிப்பிராயத்தை நான் ஆமோதிக்கின்றேன். மகா நாட்டின் தலைவர் போதனாமுறை பாடசாலைகளினால் அதிகமாக பயன்படவில்லை என்று சொல்வதை கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தற்போது கல்வி நிலைமையைப்பற்றி திறமையான அபிப்பிராயங்களை பகிரங்கமாகஎடுத்துரைத்த வரவேற்புக் கமிட்டித்தலைவர், திரு. பி. வீரராகவன் அவர்களுக்கும், மகாநாட்டின் தலைவர் திரு. எ. யி. வெங்கடேசய்யர் அவர்களுக்கும் நமது மனமார்ந்த வந்தனத்தை யளிக்க நல்ல காரணங்களுண்டு. செயின்ட். கேபிரில் உயர்தர பாடசலையில் கூடிய கல்வியாளர்களைக் காட்டிலும் மந்திரியாருக்கு இந்த மாகாணத்தில் தேசிய கல்வியைப் பறப்புவதற்கு தக்க யோசனை கூற வேறு எவர்களுமில்லையென சொல்லலாம். ஆதலின் இவர்களுடைய அபிப்பிராயங்களை. கனம் கல்வி மந்திரியார் எடுத்துக்கொள்வார்களென்று நம்புகின்றேன்.

தற்போது சென்னையிலுள்ள கல்வியதிகாரிகளால் ஒடுக்கபபடுவதுபோலல்லாமல் வார்தா மகாநாட்டில் கல்வி யபிவிருத்திக்கு ஆகாரம் போன்ற முக்கிய கொள்கைகளையும் அவைகளை அனுஷ்டிக்கப்படவேண்டிய வழிகளையும் தீர்மானிப்பார்களென்று நம்புகின்றேன்.

ஜார்ஜ். எஸ். அருண்டேல்.

## சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

பழைய சந்தா நேயர்களில் சிலர் பணம் அனுப்பாமல் பத்திரிகை வரவில்லை என்று எழுதி வருகின்றார்கள், 1936ம் வருடம் செப்டம்பர் மாதத்திலிருந்து சந்தா செலுத்தி வருபவர்களுக்கெல்லாம், பத்திரிகை வந்துக்கொண்டிருக்கும். மற்றவர்களுக்கு பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. ஆதலின் 5ம் வருடப் பத்திரிகை வேண்டுபவர்கள் உடனே, புது வருடச்சந்தா என்று எழுதி ரூபாய் ஒன்று மணியார்டர் செய்ய[illegible]

ஆரம்பக் கல்வி ஆபீஸ்.
94, 95. புதுத்தெருவு, மண்[illegible]
மதராஸ்.

## EDUCATIONAL REFORM.

Sir,—I must congradulate the Fifth Conference of Madras Teacher-Managers on the fine outspoken words both of the Chairman of the Reception Committee and the President. There was a very right condemnation of the uncalled for aspersions by the Director of Public Instruction on elementary school teachers. Some time ago I wrote on this matter expressing the hope that the Minister of Education had duly called the attention of the Director of Public Instruction to this inexcusable discourtesy. Unfortunately, however, the very old friendship between them, dating, Dr. Subbaroyan. told a public meeting the other day, from college days at Cambridge, mustneeds make a correct relationship somewhat difficult and I am much afraid lest the Minister of Education be much more Mr. Statham than Dr. Subbaroyan. Mr. Varkey, speaking at the same conference, rather confirms this for he is reported to have said that a certain G. O. might have been buried had it been the work of the interim Ministry but that Dr. Subbaroyan had decided it should not be buried because it was the work of the Director of Public Instruction. Evidently at present Directors of Public Instruction are more important than Ministries—a strange situation.

I must confess that the whole tone of Mr. Varkey's speech savours of the dictatorial, but dictatorship is in the air nowadays and we must expect to be dictated to. In any case it was effectively offset by those of the Chairman and president.

I am glad to read in doth that it is urged that the Minister of Education should direct his own Ministry and that the post of Director of Public Instruction be abolished I entirely agree that the direction and inspection should be reduced to an effective minimum and I urge that great heed be paid to the President's statement that training institutions do not at present serve the purpose for which they were created.

We have good cause to thank Messrs, P. Viraraghavan and Venkatesa Aiyar for giving an expert pronouncement on the educational situation. Dr. Subbaroyan could not do better, or more effectively promote national education in this Presidency, than by taking the advice of so eminent a body of educationists as that which met in conference at St. Gabriel's High School.

I wonder, by the way, if from the wardha Conference we shall receive bread or stones- the breadof fundamental principles andtheir application, or once again that general tinkering which at present seems to be all we can get from our educational rulers in Madras.

George S. Arundale.

## பொதுக் குறிப்பு.

21-10-37ல் நடந்த சென்னை ஜில்லா கல்விச் சபையில் சென்ற வருடம் 1936-37ல் திறமையுள்ளபள்ளிக்கூடம்என்று தீர்மானிக்கப்பட்ட எல்லா பாடசாலைகளுக்கும், மிகுந்த திறமையற்ற பாடசாலைகளுக்கு 1937-38 கல்வியதிகாரிகள் பரீக்ஷை ரிபோர்ட்டை ஆதாரமாகக் கொண்டு அரசாங்க உத்திரவில் சொல்லிய பிரகாரம் திறமையுள்ள பாடசாலைகளாக இருந்தால் அவைகளுக்கும் அட்வான்ஸ் கிராண்டு கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

* * *

பாடநிர்மாணம், கல்வி முறை, கல்வி சீர்திருத்தம் இவைகளை எல்லாவற்றையும் ஆலோசிக்கும்பொழுது, ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையானவைஎவை,என்பதையும், குழந்தையின் சுற்றுப் பக்கத்திலுள்ள விஷயங்களையும் நாம் முக்கியமாக கவனிக்கவேண்டும். இதில் ஒருபையன் கல்விகற்கவேண்டியது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுமுக்கியமானது ஒவ்வொரு பெண்ணும் கல்வி கற்கவேண்டியதாகும்.

திரு. H. F. ஸாண்டர்ஸ்
கல்வியிலாகா டைரக்டர்.

# புதிய ஜில்லாக் கல்வி போர்டுகள்.

—0—

கல்விச் சபைகளுக்குப் பதிலாக, புதிதாக ஏற்படுத்தப் போகும் ஜில்லாக் கல்வி போர்டுகளுக்கு, சகல சுதந்திரமும், அதிகாரமும், அளிப்பதற்கு காங்கிரஸ் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. ஆசிரியர்களுக்கும்,மானேஜர்களுக்கும், சம்பள விஷயங்களில் ஏற்படும் தகராறுகளும், மானேஜர்களுக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளும், பாடசாலை மானேஜர்களுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் ஏற்படும் அபிப்பிராய பேதங்களும், சண்டை சச்சரவுகளும், இந்த போர்டுகளுக்கு முடிவாகத் தீர்மானிக்க அதிகாரம் கொடுக்கப்படும். இதன் நோக்கம் தற்போது டைரக்டர் ஆபீசிலும், சென்னை செக்ரடரியேட் ஆபீசிலும் அனுவசியமாக வளர்ந்துவரும் வேலைகளைக் குறைக்கவேண்டுமென்பதென தெரிகிறது. இந்தச் சீர்திருத்தத்தை நாம் மிகவும் பாராட்டுகின்றோம். இந்த போர்டு மெம்பர்களுக்குப் பிரயாணப்படி செலவு கிடையாது. இந்த போர்டு, எய்டட் பாடசாலையின் கிராண்டை முடிவாகத் தீர்மானம் செய்வதற்கு அதிகாரமேயொழிய, பணம்கொடுக்குமதிகாரம் கவர்ன்மெண்டாரே அந்தந்த தாலுக்காவிலிருக்கும் கஜானாவின் மூலம் கொடுக்கப் போகிறார்களாம். இவ்விதம் ஏற்பாடு செய்வதற்குக் காரணம் சில ஜில்லாக்கல்விச் சபைத் தலைவர்கள் பணத்தை களவாடியதே.

தற்போது ஜில்லா போர்டுகளினாலும் முனிசிபல் சபைகளினாலும், நடத்தப்படும் பாடசாலைகள் இப் புதிய போர்டுகளினால் பரிபாலிக்கப்பட்டுவரும். இது ஒரு நல்ல ஏற்பாடு. ஏனெனில், தற்போதைப்போல் சில போர்டு மெம்பர்கள் நினைத்தபடி அனுவசியமாக வெல்லாம் எய்டட் பாடசாலைகளின் பக்கத்திலும், பிள்ளைகள் சேராதஇடங்களிலும், இலவச பாடசாலைகளை வைக்க முடியாது. இப்புதிய சீர் திருத்தம் விரைவில் வருமானால் ஆரம்பக் கல்வி ஒழுங்காகவும், திறமையாகவும் நமது இராஜதானியில் சீக்கிரம் பரவும் என்பதில் சந்தேகமில்லை.

### சேலம் ஜில்லா போர்டு உபதலைவர் திரு. எ. பி. வெங்கடேசய்யர் அவர்களின் பிரசங்கம்.

சமீபத்தில் சென்னையில் நடந்த ஆசிரிய மானேஜர்களின் 5-வது மகா நாட்டில் திரு. A. E. வெங்கடேச ஐயர் அவர்களின் சொற்பொழிவின் சுருக்கம் கீழ் வருமாறு—

அதிகாரிகள் ஒரு புறமும், இலவச பாடசாலைகள் மற்றொருபுறமும், படுத்தும் துன்பங்களுக் கிடையிட்டு எய்டட் பாடசாலைகளை நடத்திவரும் மானேஜர்களின் துன்பம் மிகவும் கவனிக்கத் தக்கது. பண உதவியோ மிகக் குறைவு. அதிகாரிகளின் உத்திரவுகளும், சுற்றறிக்கைகளும், அரசாங்கச் சட்ட திட்டங்களும் மிக அதிகம். வரும் கொஞ்சம் பணமும் கட்டட வாடகைக்கும், பெஞ்சு நாற்காலிகளுக்கும் செலவிட வேண்டி யிருக்கிறது. வருட முடிவில் சம்பளம் கொடுத்த உபாத்தியாயர்களுக்குச் சேர வேண்டிய கிராண்டும் கிடைப்பது கிடையாது. இவ்வளவு அவஸ்தைகளுக்கிடையே ஆசிரிய மானேஜர்கள் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு உழைத்து வருகின்றனர். இவர்களின் அவஸ்தைகளைக் கண்டு ஒவ்வொரு தேச வாசியும் தயாளச் சிந்தனையுடன் இவர்களை கவனியாமலிருக்க முடியாது.

இந்த ஆசிரிய மானேஜர்கள் எய்டட் பாடசாலைகளின் கூட்டத்தில் ஓர் முக்கிய உறுப்பாகும். இவைகளை அழித்து விடுவது சரியான முறையல்ல. தற்போதுள்ள கல்வி முறையில் இவர்கள் மிகவும் உபயோகமானவர்கள். ஆரம்பக் கல்வி உலகில் எய்டட் பாடசாலைகள் உழைப்பதைப் பார்த்தால், வேறு எந்த வகையான பாட சாலைகளும் இவைகளை புறக்கணிக்க முடியாது நமது அரசாங்கத்திற்கு இதரபாடசாலைகளைக் காட்டிலும் இந்த எய்டட் பாடசாலைகள் குறைந்த செலவில் கல்வியை அபிவிருத்திசெய்த

உதவி புரிந்து வருகின்றது. தற்போது பண நெருக்கடியில் அவஸ்தைப்படும், நமது அரசாங்கத்திற்கு இந்த எய்டட் பாடசாலைகள் பெரிய உதவி புரிந்து வருகின்றன. வரி கொடுப்போர்களுக்கும் இப் பாடசாலைகள் அதிக நன்மை புரிகின்றன.

இந்த 20-ம் நூற்றாண்டில் பாடசாலைகளும் பிள்ளைகளும், பொது மக்கள் பணச் செலவும் அதிகமாக விருத்தியடைந்த தென்பதில் சந்தேகமில்லை. ஆனால் நமது நாட்டின் படித்தவர்களின் தொகை அதிகமாக விருத்தியாகாமல் இருக்கின்றது.

[தொடரும்]

## திரு. வி. ஜே. வார்க்கி அவர்களின் பிரசங்கம்.

சமீபத்தில் சென்னையில் நடந்த ஆசிரிய மனேஜர்களின் 5-வது மகாநாட்டைத் திறந்து வைத்தபொழுது கனம் கல்வி மந்திரியவர்களின் பார்லிமெண்டரி செகரடரி திரு. வி. ஜே. வார்க்கி அவர்கள் பேசியதின் சுருக்கம் கீழ் வருமாறு:—

இந்த ராஜதானியில் பாமரத்தன்மை மக்களிடத்திலிருந்து சீக்கிரம் ஒழியாததற்குக் காரணம் ஆரம்பப் பாடசாலைகளில் பெரும்பாலும் முழுப்பாடசாலைகளாகவும், திறமையான பாடசாலைகளாகவு மில்லாமையே. இத்தகைய நிலைமைக்கு ஒருவர்மீதும் குறைச்சொல்ல தயாராகயில்லை. ஒரு பாடசாலை முழு பாடசாலைகளாக இல்லாமலிருக்கலாம் ஆனால் அப் பாடசாலை திறமையற்றவை யென்று சொல்லமுடியாது. சாம்பியன் திட்டத்தின்படி மத்தியில் ஒரு முழுப்பாடசாலையும் அதைச் சுற்றிலும் 2, 3, வகுப்புள்ள சிறு பாடசாலைகளையும் ஏற்படுத்தலாம். ஆதலின் தற்போதைய கல்வி திட்டத்தில் சிறு பாடசாலைகளுக்கும் இடமுண்டு. ஆனால் திறமையற்ற பாடசாலைகள் மூடவேண்டியதுதான். திறமையற்ற பாடசாலைகளை, திறமையுள்ள பாடசாலைகளாக ஆக்கவேண்டியது.

ஆசிரிய மனேஜர்களின் கடமை. இரண்டாவது வருடாந்திர கிராண்டை ஒன்று மானேஜருக்கும், இரண்டாவது ஆசிரியருக்குமாக பிரிக்க வேண்டு மென்பது என் அபிப்பிராயம். எல்லா பாடசாலைகளும் அரசாங்கத்தாரே எடுத்துக் கொண்டு பரிபாலிப்பது மிகவும் கடினம். போர்டு முனிசிபல் பாடசாலைகளை மட்டும் அரசாங்கத்தாரே எடுத்துக்கொள்வர் மிகுந்தபாதி எய்டட் பாடசாலைகள் திறமையாக நடைபெற்று வரும்படி அரசாங்கத்தார் கண்காணித்து வருவர். இப் புதிய காங்கிரஸ் அரசாங்கத்தார் கல்வித்துறையில் லஞ்சத்தை ஒழிக்க தீவிரமாக முயற்சிப்பார்கள் என்று கூறினார்.

பின்னர் மகா நாட்டு முடிவில் பேசுகையில் தற்போது அரசாங்கம் செகண்டரி பாடசாலைகளில் நான்காவது பாரத்தில் ஒரு பொதுப் பரீட்சை வைக்க தீர்மானித்திருப்பதாகவும் ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளில் 9-வது வகுப்பு வரையில் வைக்க ஹையர் எலிமெண்டரி பாடசாலைகள் பண உதவியும், தளவாடங்களும் இருந்தால் செகண்டரி பாடசாலைகளாக மாற்றிக்கொள்ளலாம், இல்லையேல் தற்போதைய பாடசாலைகள் 5-வது வகுப்புவரையில்தான் வைக்கமுடியுமென்று கூறினார். ஒரு பாடசாலை திறமையுள்ளது என்று தீர்மானிக்க கல்வி யதிகாரிகளை தகுந்தவர்களென்றும் சொல்வதற்கில்லை, பொது மக்கள் தகுந்தவர்களென்றும் சொல்வதற்கில்லை. ஆனால் இருவரும் கலந்த ஒருபொதுச்சபைத்தா தீர்மானிக்க வேண்டு மென்று சொன்னார்.

## ஆசிரியர்களுக்குக் கிராண்டு.

சில பாடசாலை மானேஜர்கள் கிராண்டுத் தொகைகளை பெற்றும் ஆசிரியர்களுக்குச் சரிவர சம்பளம் கொடுத்து வருவதாகத் தெரியவில்லை. இதைப்பற்றி அநேக இடங்களில் மானேஜர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சண்டையேற்பட்டு அடிக்கடி கல்வி யதிகாரிகளுக்கு பல பிடிஷன்கள் வருவதாகத் தெரியவ



றது. இதைப்பற்றி சமீபத்தில் தெலிச்சேரி ஆசிரியர் மகா நாட்டில் திரு. கல்வி டைரக்டர் அவர்கள் ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்கும் கிராண்டைப் பகிர்ந்து கொடுக்க ஓர் திட்டத்தை தயாரிக்கப்போவதாகக்கூறினர். இதைப்பற்றி விசாரித்தபொழுது ஒரு உபாத்தியாயரின் கிராண்டுத் தொகையில் நூற்றுக்கு 90 உபாத்தியாயருக்கும், 10 பங்கு பாடசாலை நிர்வகிக்கும் மனேஜர்களுக்குக் கொடுக்க ஓர் திட்டம் அரசாங்கத்தார் தயாரிக்கப் போவதாகத் தெரிகிறது. இத் திட்டம் எந்தப் பாடசாலையில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைக்கவில்லையோ அப் பாடசாலைகளுக்குத்தான் அமுலுக்குக் கொண்டுவரப்படும்' எனத்தெரிகிறது. 15 நாட்களுக்குள் சர்டிபிகேட்டுக்களைக் காட்ட வேண்டுமாம். சமீபத்தில் அரசாங்கத்தார் விடுத்த ஓர் உத்திரவில் இன்ஸ்பெக்டர்கள் பாடசாலைகளைப் பரீட்சை செய்யும் பொழுதே சர்டிபிகேட்டுகளைக் காட்ட வேண்டுமாம். தவறினால் பரீட்சை தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் விட்டுப்போன சர்டிபிகேட்டுக்களைக் காட்ட வேண்டுமாம் இல்லையேல் கிராண்டுகள் சிபார்சு செய்ய முடியாதென உத்திரவில் குறித்திருக்கிறது. இந்த 15 நாட்கள் தவணை போதாது. 3 மாதத்தவணையாவது கொடுக்கவேண்டும். எதற்கும் இனி பாடசாலை மானேஜர்கள் ஒரு உபாத்தியாயரை வைக்கும் பொழுதே அவ் வுபாத்தியாயரின் சர்டிபிகேட் நகல் ஒன்று எடுத்து டிப்டி இன்ஸ்பெக்டரிடம் காட்டி கையொப்பம் வாங்கி வைத்துக்கொள்வது மிகவும் நல்லது.

## ஒழுக்கத்தால் சிறந்தோன்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேராதார்.

இந் நிலவுலகில் மக்கள் அணியவேண்டிய அழகியகலம் குணம் ஒன்றே. செல்வம் வரும் போகும். அதனையே மிகச் சிறந்ததாக எண்ணிப் பலர் தங்கள் வாழ்நாட்களை வீணாக கழிக்கின்றனர். பலர் பேராசை என்னும் பேய்க்கு அடிமையாகி உண்மையையும், மரியாதையையும் மானமின்றி விற்பனை செய்கின்றனர். எத்துணை சிறந்த செல்வந்தனாக இருப்பினும் அவனிடம் உண்மையில்லையாயின் அவன் விலங்குக்குச் சமானமே. எத்தகைய விரிந்த புகழுடைய கல்விமானாக இருப்பினும் அவனிடம் குணமில்லையாயின் அவனும் விலங்கினத்தைச் சேர்ந்தவனே. ஆதலால் ஒருவன் தன் இன்னுயிர்க்கு மேலாகக் கருதவேண்டியவை உண்மை, ஒழுக்சம், தெய்வ பக்தி முதலியனவாம். எவ்வளவு தாழ்ந்த குலத்தில் பிறந்தவனும், எவ்வளவு கொடிய வறுமையுடையவனும், மேற் கூறிய சிறந்த குணங்களை எளிதில் பெறலாம். அவனே யாக்கையின் உறுதிப் பயனை எய்துவான். அவனே எல்லோரினும் சிறந்த பெரியோன். இதை விளக்க ஈண்டு ஒரு சரித்திரம் கூறுவோம்.

நூலைப்பாடி என்னும் ஊரிலே செம்படவ சாதியிலே பிறந்த ஓர் குழந்தை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, பெற்றோருக்கும் மற்றோருக்கும் மகிழ்ச்சி யூட்டி வந்தது. அக் குழந்தை வயது முதிர முதிர சிவபெருமானிடம் மிக பக்தி பூண்டது. ஆனால் அதற்கு அதிபத்தன் என்னும் பெயர் உண்டாயிற்று.

அதிபத்தர் மிகச் செல்வ வானாகயிருந்து தான் தருமம் தவறாமல் செய்து வந்தார். இப்படி யிருக்கும் நாளில் சிவபெருமான் பரிசோதிக்க திருவுளங்கொண்டார். அவரை வறுமைப் பிணியும் பற்றியது, செல்வம் குறைந்தது. அவரும் அவருடைய பெற்றோரும் உண்ண ஒன்று மின்றி பட்டினி கிடந்தனர். அக் காலத்திலும் கடலிற் சென்று தாம் வலையை வீசிய போது கிடைத்த ஒரு மீனை கடவுளுக்கென்று விட்டு விட்டு வெறுங்கையோடு வீட்

டுக் கேகுவார். அவன் தாய் தந்தையர் தம் மகன் வெறுங்கையோடு வந்ததற்காக மனதளர்ச்சியை யடைந்தனர். ஆனால் நாயனாரோ மனம் வருந்தினதேயில்லை. இவ்வாறு ஒன்றல்ல இரண்டல்ல ஆறு நாட்கள் சென்றன. அதிபத்தரும் அவரது இல்லத்தோரும் பசிப் பிணியால் வருந்தினர். ஏழாம் நாள் அதிபத்தர் கடலில் சென்று வலைவீசினர். வெகு நேரம்வரையில் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக அதியற்புதமான சிறந்த மீனொன்று அகப்பட்டது. உடனுள்ளவர் எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினர். ஆனால் நாயனாரோ அதனைக் கடவுளுக் கென்று போக விட்டு விட்டார். எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். உடனே கடவுள் ஆகாயத்தில் அன்னவருக்கு பிரத்தியட்சமாகி அவருக்கும் அவர் பெற்றோர்க்கும் கிடைக்க வரியபெரும் பேறாகிய முத்தி வீட்டினை யளித்தார்.

K. C. பத்மநாபன்.
இராமலிங்கஸ்வாமி,
உயர்தர ஆரம்பப் பாடசாலை.
சிந்தாதிரிப்பேட்டை.

## T. B. கிருஷ்ணசாமி முதலியார் மறைவு.

---

இவர் ஜில்லாக் கல்வி அதிகாரியாக பல ஜில்லாக்களிலிருந்து, கடைசியாக தென் ஆற்காடுஜில்லா கல்வியதிகாரியாயிருந்து வந்தார். சமீபத்தில் இவர் அநந்தபுரம் சர்வ கலாசாலைத் தலைவராக மாற்றப்பட்டார். சிலகாலம் நோயுற்றிருந்து காலமடைந்தார்.

## தற்கால கல்வி நிலை.

—.0:—

கல்வித்தொழிலிலும், கல்வியிலும் தேசம் முன்னேறுவதற்குரிய பொதுஜன கல்வித்திட்டம் இதுவரை சரியானபடி அனுஷ்டிக்கப்படவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவில் 5 வயதுகள் நிறைந்தும் அதற்கு மேற்பட்டும் இருக்கும் ஜனத்தொகையில் 100-க்கு 10 பேர்கள்தான் படித்தவர்கள் நாகரிகம் நிலவும் ஒவ்வொரு தேசத்திலும் இந்த விகிதம் 100-க்கு 80 ஆக இருக்கவேண்டும். ஜனத்தொகையில் 100-க்கு 5 சிறுவர்கள்தான் இப்போது வித்தியாசாலைகளுக்குப் போகின்றனர். இந்த விகிதம் குறைந்தது 15 ஆக இருக்கவேண்டும். அமெரிக்காவில் இந்த விகிதம் 100-க்கு 24 ஆக இருக்கிறது.

மொத்தம் நகரத்திலிருக்கும் ஸ்திரீகள் தொகையில் 14. 9% பேர்கள்தான் படித்தவர்கள். தொழிற் கல்விக்கும், வர்தகக் கல்விக்கும் இப்போது வசதிகள் மிகக் குறைவு; வயதானவர்களுக்கு கல்வி வசதி இல்லை எனவும் கூறலாம். பிரஜாகடமை, சமூக சக்திகள், தொழிலில் நல்னடத்தை, தேசநிர்மாணம் ஆகியவற்றின் போதனை இதுவரை ஒருவருக்கும் தெரிந்ததில்லை.

ஒவ்வொரு கிராமத்திலும் சிறுவர்களுக்கு வித்தியாப்பியாசமளிக்கும் பொறுப்பை, சில வரம்புகளுக்கு உட்படுத்தி அக்கிராமவாசிகளிடமே விட்டு விட்டால் முற்போக்கு துரிதமாக ஏற்படும்.

ஸர். எம். விஸ்வேஸ்வரய்யா.

## MONTHLY RETURN FORMS.

புதிய ஆரம்பக்கல்விச் சட்டத்திருத்தத்தின் 5-வது பிரிவின்படி பிரதி மாதமும் ஒவ்வொரு பாடசாலையும் மாதாந்திர ரிபோர்ட்டு 15-ந் தேதிக்குள் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு யனுப்பசிரமம் இல்லாமல், (Monthly reaturn Forms.) அச்சிடப்பட்டிருக்கின்றன. 4 அணாதபால் பில்லைகளை [Postal Stamps] காலணாபில்லைகளாக அனுப்பினால் 24 பாரங்களும் உடனே தபாலில் அனுப்பிக்கப்படும்.

மானேஜர்.
"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"
94-95, புதுத்தெரு மண்ணடி மதறாஸ்.

# சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் 5-வது மகாநாடு

---

## வரவேற்புக் கமிட்டித் தலைவரின் பேருரை:—

## 1937.

---

சிநேகிதர்களே !

இந்த ஐந்தாவது மகா நாட்டின் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக நான் உங்களை அன்புடன் வரவேற்கின்றேன். சாதாரணமாக இந்த மகா நாடு டிசம்பர் மாதத்தில் நடப்பது வழக்கம். ஆனால் நமக்கு வந்துள்ள அபாயகரமான நிலைமையை உத்தேசித்து மூன்று மாதங்களுக்கு முன்னரே இந்த மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. நான்கு வாரங்களுக்கு முன்பு தான் இம்மகா நாட்டைக் கூட்ட முடிவு செய்யப்பட்டது. ஆதலின் வெளி ஜில்லாக்களிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளுக்கு வேண்டிய அதிக சௌகரியங்களை வரவேற்புக் கமிட்டியரால் செய்ய முடியாமலிருக்கின்றது. பத்திரிகைகளிலும் மகா நாட்டைப்பற்றி வேண்டிய பிரசாரம் செய்ய முடியாமல் போய்விட்டது. நாம் இப்பொழுது இக்குறைகளை யெல்லாம் பொருட்படுத்தாது நடக்கவேண்டிய காரியங்களை கவனிப்போமாக.

## திரு. ஸ்டாத்தம் துரை அவர்களின் சொற்பொழிவு:—

நான் அதிக காலத்தை வீணாக்காமல் ஆரம்பக்கல்வியைப்பற்றிய பல பிரச்னைகளை இங்கு கூடியிருக்கும் பிரதிநிதிகட்கும் தலைவருக்கும் விவாதிக்கும்படி விட்டுவிடுகின்றேன். இப்பொழுது முதல் முதலில் நம்முடைய மனதிற்கு வருவது சமீபகாலத்தில் கோயம்பத்தூரில் திரு. ஸ்டாத்தம் துரையவர்கள், தற்போதுள்ள ஆரம்பக் கல்வியிலுள்ள பிள்ளைகளின் தேக்கமும், பொதுப்பண விரயமும், அதிகப்பட்டு வருவதற்கு, ஆசிரியர்களும் ஆசிரிய மானேஜர்களும் தான் காரண பூதர்களென்று சாற்றப்பட்ட குற்றச்சாட்டு நமது மனதிற்கு வருகிறது. இது உண்மையாயின் நாம் நம்மைத்திருத்திக்கொள்வோம். இல்லையேல் இவருடைய குற்றச்சாட்டை எவ்வளவு உண்மையற்றது என்பதை விளக்கிக் காட்டுவோம். பிள்ளைகளின் தேக்கத்திற்கும் பொதுப்பண விரயத்திற்கும், ஆசிரிய மானேஜர்களாகிய நாம் காரண பூதர்களாயிருந்தால் நம்முடைய பாடசாலைகளை பொதுமக்கள் எப்பொழுதோ புறக்கணித்திருப்பார்கள். ஆதலின் நாம் காரண பூதர்களல்ல. நமது நாட்டில் வறுமை நோய் மக்களை அதிகமாக வாட்டி வருகின்றது. கிராமாந்திரங்களில் வயிற்றுக்கே சாப்பாடு இல்லாத மக்கள் கல்வியைப்பற்றி எவ்வாறு நினைக்க முடியும். கிராம மக்கள் தங்கள் பாடசாலை வயதுள்ள பிள்ளைகளை ஆடுமாடு மேய்த்தல், விவசாயம், தோட்டவேலை, முதலிய சிறு கைத்தொழில்களில் ஈடுபடச் செய்து தங்கள் வறுமைப்பிணியை ஒருவாறு நிவர்த்திசெய்ய, பாடசாலையில் பிள்ளைகளை விடாமல், நிறுத்திக் கொள்ளுகின்றார்கள்.

இதற்கு ஆசிரியர்களோ அல்லது ஆசிரிய மானேஜர்களோ என்னசெய்யமுடியும். [illegible]

டைரக்டர் துரையவர்கள் தான் இது வரையில் என்ன செய்திருக்கின்றார்? இனிமேல் என்ன செய்யப்போகின்றார்? ஆதலின் பாடசாலைகளில் பிள்ளைகளின் தேக்கமும், ஆரம்பக் கல்வியில் பண விரயமும், கிராமமக்களின் வறுமை நோய் ஓர் அளவு குறைந்து, பொருளாதார நிலை உயர்ந்தாலல்லாது தலை சிறந்து விளங்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இத்தகைய பிள்ளைகளின் தேக்கத்தை தற்போது பரிசீலனை செய்துப் பார்த்தால் எய்டட் பாடசாலைகளைக் காட்டிலும் ஒன்றுக்கு இரண்டாக பொதுமக்களின் பணத்தைச் செலவழித்து நடத்தப்படும் ஜில்லா போர்டு, பஞ்சாயத்து, முனிசிபாலிடி, பாடசாலைகளில் தான் இத்தகைய தேக்கமும் விரயமும் அதிகமாக யிருக்கின்றன.

## இடைக்கால மந்திரிகளின் அறிக்கை.

இடைக்கால மந்திரிகள் கல்விச் சீர்திருத்தத்தைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டனர். அதை தற்போதுள்ள காங்கிரஸ் மந்திரிகள் நிராகரிப்பார்களென்று நினைக்கின்றேன். ஆனால் அந்த அறிக்கையும் உபயோகமுள்ள அறிக்கைதான். ஏனெனில் அந்த அறிக்கையில் இதற்கு முன்னிருந்த கல்வி மந்திரிகள் செய்த பல கெடுதலான விஷயங்கள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. அதில் 5-வது வகுப்பு வரையில் இல்லாத பாடசாலைகளும், ஒரு உபாத்தியாயரால் நடத்தப்படும் பாடசாலைகளும் திறமையற்றவைகளென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆசிரிய மானேஜர்களுக்கு 3-வது 4-வது வகுப்புப் பிள்ளைகளை தங்கள் பாடசாலைகளுக்கு சேர்க்கக்கூடாதென்ற கெட்ட எண்ணமென்று சொல்லமுடியுமா? பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பப்படவேண்டுமென்ற பொருப்பு பெற்றோர்களுடையதே ஒழிய ஆசிரியர்களுடைய பொருப்பாகாது. பாடசாலைகளை ஒரு உபாத்தியாயரால் நடத்தப்படுகின்றன என்ற காரணத்தினாலும் கிராண்டுகளை குறைப்பதோ, மூடிவிடுவதோ ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு பிற்போக்கான காரியமாகும். அவ்விதம் காங்கிரஸ் மந்திரிகளும் டைரக்டர் போதனைக்குத் தலைசாய்த்துநடந்துக்கொள்வார்களானால் இவர்கள் ஆட்சி முஹம்மத் டோக்ளாக்கின் ஆட்சிக்கு சமானமான ஆட்சியென்றுதான் சொல்லவேண்டும்.

கல்வி வாசனை அறியாத கிராம மக்களுக்கு கொஞ்சமாவது கல்வி வாசனை இருக்கச் செய்வது முக்கியமல்லவா. எப்படியெனில் ஒரு கிராமத்தில் ஜனங்கள் கிணற்று ஜலம் உப்பாயிருந்தாலும், உள்ளூரிலுள்ள உப்புள்ள கிணற்று ஜலத்தைத்தான் உபயோகிப்பார்கள். எவ்வளவு நல்ல ஜலமாய் இருந்தபோதிலும், அடுத்த கிராமத்திலுள்ள நல்ல ஜலக் கிணற்றுக்குப்போக மாட்டார்களல்லவா? ஆதலின் ஒரு கிராமத்தில் பாடசாலையே, இல்லாதுஇருப்பதைக்காட்டிலும், ஏதாவது ஒரு திறமையற்ற பாடசாலை இருப்பது மேலல்லவா.

நமது இந்தியா தேசம் ஒரு புராதனமான தேசம். மேல் நாட்டு முறையைக் கைக்கொண்டால் நமது நாட்டில் பொதுஜனங்களின் கல்வி அபிவிருத்தியாகாது. இன்று நமது நாட்டில் அறிஞர்களாக விளங்கும் பெரியார்களெல்லாம், தற்போது திறமையற்ற பாடசாலைகள் என்று சொல்லப்படும் ஒரு உபாத்தியாயரால் நடத்தப்பட்டு வரும் கிராமப்பாடசாலைகளில் வாசித்தவர்களே என்பதில் ஐயமில்லை. முன்பு இருந்த மந்திரிகள் எல்லாப் பாடசாலைகளிலும், ஐந்தாவது வகுப்பு வரையில் முழுப் பாடசாலைகளாக்க ஏற்பாடு செய்தனர்; ஆனால் சொல்லுவது எளிது, செய்வது கடினம் என்ற பழமொழிப்படி, தற்போதுள்ள சிறு பாடசாலைகளை முழுப் பாடசாலைகளாக்க பொதுமக்களுடைய பணம் எவ்வளவு செலவாகும் என்பது அவர்களுடைய ஏற்பாட்டை அமுலுக்கு கொண்டுவந்திருந்தால் நன்றாகத் தெரிந்திருக்கும். ஆதலின் நான் சொல்லியது போல் காங்கிரஸ் மந்திரிகள் இடைக்கால மந்திரிகள் வெளியிட்ட அறிக்கையை தலைக் காட்டாது புதைத்துவிடுவார்கள் என்று நம்புகின்றோம்.



## தகுதியற்ற கல்வி முறைகள்

பண்டைய காலத்தில் நமது நாட்டுக் கல்வி எம்முறையில் நடைபெற்றது, இப்பொழுது எவ்விதம் நடந்து வருகின்றது, இனி எவ்விதம் நடைபெறவேண்டுமென்ற விசாரமே இல்லாமல், மேல் நாட்டுக் கல்வி முறைகளும், எண்ணங்களும் நம்மை வாட்டிவருகின்றது. தற்போதுள்ள கல்வி முறை மேல் நாட்டுக் கல்வி முறையுமல்ல, நம் தாய் நாட்டுக் கல்வி முறையுமல்ல.

மேல் நாட்டுக் கல்வி அதிகாரிகளுக்கு நம்முடைய நாட்டின் இயற்கை நிலையும், தேசமக்களின் பழக்க வழக்கங்களும், பொருளாதார நிலைமையும், சரிவர தெரியவராது. ஆதலின் அவர்கள் நம் பண்டைய நாட்டுக் கல்வி முறையை குறை கூறுகின்றனர். தலைக்கேற்றபடி குல்லாவை தைத்துக் கொள்ளவேண்டுமேயொழிய, குல்லாவிற்கேற்றபடி தலையை திருத்திக்கொள்ள முடியாத காரியமல்லவா? அம்மாதிரி நமது நாட்டில் அகப்படும் ஆசிரியர்களைக்கொண்டு, நம் பழக்க வழக்கப்படி, சுருங்கின செலவில், நமது மக்களுக்கு கல்வியை அபிவிருத்தி செய்வதைவிட்டு, மேல் நாட்டு முறைப்படியும், பழக்க வழக்கப்படியும் நம் நாட்டு பிள்ளைகளுக்கு எவ்வாறு கல்வி கற்பிக்க முடியும். மேல் நாட்டு முறைகளை அனுசரித்ததனால்தான் நமது நாட்டில் சீக்கிரம் தேசீயக் கல்வி பரவாமல் இன்னும் தடைப்பட்டுவருகின்றது.

## பொதுஜனக் கல்வி அடைவதெப்படி?

நூற்றுக்கணக்கான, வகுப்பு பேதங்களாலும், ஜாதி வித்தியாசங்களாலும் வகுக்கப்பட்ட ஏராளமான மக்கள் நிறைந்த நாட்டில் சீக்கிரத்தில் ஒவ்வொருவரும் வாசித்து எழுதும் விதமாக பொதுஜனக் கல்வி அபிவிருத்தி செய்வது அசாத்திய காரியமாகும். கூடுமானால் மக்களிடையே பொதுவாக கல்வி யறிவைப்பரப்பலாம். நமது முன்னோர்கள், பொதுஜன அறிவை விருத்தி செய்வதற்காக. ஆங்காங்கு கிராமங்களிலும், குக் கிராமங்களிலும், இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நல்ல புராண இதிஹாஸங்களை பல அறிஞர்களைக் கொண்டு பிரசங்கிக்கச் செய்து வந்தார்கள். அத்தகைய பிரசங்கங்களுக்கு எல்லா வகுப்பினரும், மதஸ்த்தினரும் ஊக்கமுடன் கேட்பார்கள். இவ்விதமாக பொதுமக்களின் பொதுக் கல்வி அறிவு நாளடைவில் வளர்ந்து வந்தது.

## திண்ணைப் பாடசாலைகளின் சிறப்பு

நமது இந்திய நாட்டில் ஒவ்வொரு குக் கிராமத்திலும் ஒரு திண்ணைப் பாடசாலை இருந்து வந்தது. அத்தகைய பாடசாலைகள் தற்போது நம் நாட்டில் அதிகம் கிடையா. இப் பாடசாலைகள் பூர்வீகத்தில் கோயில்களிலும், அடர்ந்த மரங்களின் நிழல்களிலும், செல்வந்தர்களின் வீட்டின் பெரிய திண்ணைகளிலும் பாடசாலைகள் நடத்தப்பட்டுவந்தன. ஆதலின் தற்போதைப்போல் பாடசாலைகளில் ஒரு பிள்ளைக்கு 9½ அடியிருக்கவேண்டுமென்ற நிபந்தனைகள் அக்காலத்தில் கிடையா. இப்பாடசாலைகள் ஒரு உபாத்தியாயராலேயே நடத்தப்பட்டு வந்தன. ஆனால் அப்பாடசாலைகள் திறமையற்றவை யென்று சொல்ல முடியாது. அந்த ஒரு உபாத்தியாயரே ஒவ்வொரு பிள்ளைக்கும் அறிவுக்குத் தக்கபடிக் கல்வியைபோதித்து வந்தார். அதற்கு பிரதியுபகாரமாக கிராம மக்கள் ஆசிரியர்களுக்கு அன்னையும் பண உதவியையுமளித்து வந்தார்கள். அதுவுமன்றி அவ்வாசிரியர் அக் கிராமத்திற்கே ஒரு பெரிய நண்பனாகவும் அக் கிராம மக்களுக்கு எல்லாவகைகளுக்கும் ஒரு வழி காட்டியாகவும், ஓர் பேரறிஞராகவும் விளங்கி வந்தார். அவர் தமது பாடசாலை முன்னேற்றத்திற்கு அரசாங்க பண உதவிக்கு நாடினரில்லை. அவ்வாசிரியர் தம்மிடத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளையும் நன்றாக எழுதவும், படிக்கவும் செய்தார். அது போலவே ஆசிரிய மானேஜர்களாகிய நாமும் அத்தகைய ஆசிரிய

களின் பீடத்தைக் கைப்பற்றி வந்தவர்கள். இங்குக் கூடியிருக்கும் நாமும் நம்மைச் சார்ந்த நமது இராஜதானியிலுள்ள இதர ஆசிரிய மானேஜர்களும், திறமையற்ற பாடசாலைக ளெனவும், வீணாக பண விரயம் செய்யும் பாடசாலைகளென்றும், டைரக்டர் அவர்களால் சொல்லப்படும் படியான பாடசாலைகளைப் பரி பாலித்து வருபவர்கள் நாம். ஆனால் டைரக்டர் அவர்கள் கூறும் பிரகாரம் உண்மையில் அத்த கைய தாழ்த்தப்பட்ட பாடசாலைகளைப் பரிபா லித்து வருபவர்கள் நாமல்ல. இந்தியா தேச மானது திரு. ஸ்டாத்தம் துரையவர்களைப் போன்ற மேனாட்டவர்களுக்கு ஓர் விநோத மான தேசம். மேல் நாட்டவர்கள் நம்மோடு பல வருஷங்களாக கூடிப்பழகினாலும் நம்மைப் பற்றி அதிகம் அவர்கள் தெரிந்துக்கொள்ள இயலாது.

## எய்டட் பாடசாலைகளின் உண்மை உழைப்பு

முற்கூறிய திண்ணைப் பாடசாலை ஆசிரியர் கள் தான் தற்போது எய்டெட் பாடசாலை களைப்பரிபாலித்து வருபவர்கள். ஆரம்பக் கல்வி அபிவிருத்திச் செய்ய வந்த பெரியார்க ளெல்லாம் எய்டெட் பாடசாலைகளை ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்குச் சரியாக உபயோகப் படுத்திக் கொள்ளவில்லை. இவர்கள் நமது நாட்டில் கல்வி போதிக்கும் பழைய முறையை வெறுத்துவந்தார்கள். அத்தகையக் குற்றங் கள் இன்னும் தற்போதைய கல்வி முறையில் காணப்படுகின்றன. அத்தகைய குற்றத்தைத் தான் திரு. ஸ்டாத்தம் துரையவர்கள் கோயம் புத்தூர் மகா நாட்டில் தற்போது வெளிக்காட் டினார். ஆரம்பக் கல்வியானது எய்டெட் பாடசாலைகளின் ஆதிக்கத்தில் வந்தாலல்லாது குறைந்த செலவில் திறமையாக ஆரம்பக் கல் வியை நமது நாட்டில் பரவ இயலாது. இந்த உண்மையை தற்போது ஆரம்பக் கல்விக்குக் காரண பூதர்களாகிய அதிகாரிகளாலும் பொது ஜனப் பிரதிநிதிகளும் புறக்கணிக்கப்பட்டுவரு வது மிகவும் வருத்தமான காரியமாகும். இது வரையில் கட்டாய ஆரம்பக் கல்வியைப் பரப்பு வதை கைவிட்டு, காலத்தையும், பொதுமக்க ளின் வரிப் பணத்தையும், ஆரம்பக் கல்வி யைப் பரீக்ஷை செய்வதிலேயே கல்வியதிகாரி களும் மற்றவர்களும் வீணாக்கினார்கள்.

உதாரணமாக சாம்பியன் திட்டமும் (Consolidation and Concentration scheme) மத்திய பாடசாலைகள் ஏற்படுத்தும் திட்டமும், எவ்வாறு ஆரம்பக் கல்வியை அபிவிருத்திச் செய்திருக்கும்? இவைகளெல்லாம் அனாவசிய மாகத் தயாரிக்கப்பட்டு இருந்தவிடம் தெரியா மல் மறைந்து போயின.

## முற்றும் சீர்திருத்தப்படவேண்டும்

சுலபமாகவும், குறைந்த செலவில் திறமை யாகவும், ஆரம்பக் கல்வித் திட்டத்தை தற் போதைய காங்கிரஸ் மந்திரிகள் சீர்திருத்து வார்களென்று உறுதியாக நம்புகின்றேன். தற் போதுள்ள மந்திரிகள் கல்வியின் சீர்திருத்தத் தைப் பற்றிப் பொதுமக்களின் அபிப்பிராயத் தை கேட்டிருப்பதைப் பற்றி மிக வும் பாராட்டுகின்றேன். பழைய முறைகளை அறவே ஒழித்து ஆரம்பக் கல்வியின் புதிய மாறுதல்களை செய்வார்களென்று நம்புகின் றேன். தற்போது ஆரம்பக் கல்வி முதலாவது கல்வி அதிகாரிகளினாலும், கல்விச் சபைகளினா லும், மந்திரியினாலும் மூன்றுவிதமாக ஆட்சி செய்யப்பட்டு வருவதனால் பல துன்பங்களில் அகப்பட்டு தத்தளித்து நிற்கின்றது. அதை எவ்விதம் சீர்திருத்துவதென்பதைப் பற்றி கீழே குறிக்கின்றேன். முதன் முதலில் ஆரம் பப் பாடசாலைகள் கல்வியதிகாரிகளின் ஆதிக் கத்திலிருந்து நீக்கப்படவேண்டும். இரண் டாவதாக ஜில்லா போர்டு, முனிஸிபாலிடி, பஞ்சாயத்து முதலிய பொது ஸ்தாபனங்களுக் கும் ஆரம்பப் பாடசாலைகளுக்கும் எவ் வகையிலும் சம்மந்தம் இருத்தல் கூடாது. தற் போதுள்ள பொதுப்பாடசாலைகளை எய்டெட் பாடசாலைகளாக மாற்றப்படவேண்டும். பொதுப்பாடசாலைகளை இனி ஏற்படுத்துதல் கூடாது. ஆரம்பக் கல்வி முழுதும் எய்டெட்



பாடசாலைகளின் ஆதிக்கத்திலிருக்கப்படவேண் டும். கல்வி மந்திரியே ஆரம்பக் கல்வியிலுள்ள எல்லாப் பொறுப்பையும், அதிகாரத்தையும் தாமே ஏற்றுக்கொள்ளவேண்டும். கல்விச்சபை கள், கல்வி மந்திரியின் மேற்பார்வையில் சர்வ அதிகாரங்களுடனும்,பணச் செல்வாக்குடனும் ஆரம்பப் பாடசாலைகளைக் கண் காணித்தும், பரிபாலித்தும் வரவேண்டும். கட்டாய இல வசப்படிப்பென்பது தற்போது அரசாங்கம் உள்ள பொருளாதார நெருக்கடியில் முடியாத காரியம். ஆதலின் எய்டெட் பாடசாலைகள் சம்பளம் விதிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

## இவ்விதம் சீர்திருத்துவதற்கு நியாயமென்ன?

மேற்கூறிய சீர்திருத்தத்தை நான் சொல் லும் பொழுது கல்வி அதிகாரிகளுக்கு பரபரப் பும் திகைப்பும் உண்டாகலாம். இதைக் கல்வி மந்திரி அவர்கள் தீரயோசித்து அவரே தீர்மானம் செய்வாராக. இதற்கு டைரக்டர் துரையவர்களின் யோசனை வேண்டியதில்லை. வேண்டுமானால் இதைப்பற்றிய யோசனை கல்வி அனுபவமுள்ளவர்களை ஒன்று கூட்டிக் கேட்க லாம். இது வரையில் டைரக்டர் துரையவர் கள் கல்வி அபிவிருத்திக்கு எத்தகைய சிறந்த காரியத்தையும் செய்ததாகக் காணப்படவில்லை.

அவர் செய்த ரூல்களும் சட்ட திட்டங்களும் ஆரம்பக் கல்விக்கு பிற்போக்கான காரியங்கள் தான். அவரோ மேல் நாட்டவர். நம் நாட்டு பழக்க வழக்கங்கள் அவருக்குத் தெரியா. அவ ருடைய எண்ணங்களும், யோசனைகளும் மேல் நாட்டு முறையையே தழுவி நிற்கின்றன. அவ ருடைய சகாக்களும் (Deputy Inspectors and Inspectresses) ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு ஓர் அணுவும் உதவி செய்ததாகத் தெரிய வில்லை. சுருங்கக் கூறுமிடத்து டைரக்டர் துரையவர்களையே ஆரம்பக் கல்வித் துறையி லிருந்தே நீக்கப்படவேண்டும். அவ்விதம் செய்வதால் பொதுமக்களின் பணத்தை அதி கம் மிச்சப்படுத்தலாம். ஜில்லா போர்டு, முனிசிபாலிடி,பஞ்சாயத்து இவைகள் ஆரம்பக் கல்வியின் அபிவிருத்திக்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. சாதாரண மாக இந்த ஸ்தல ஸ்தாபனங்கள் கட்சிப்பிரதிக் கட்சி சண்டைகளில் ஈடுபட்டு நினைத்தபடி பொதுப் பாடசாலைகளை வைத்தும், அனாவசிய மாக ஆரம்பாசிரியர்களை பலவித பணக் கஷ்டத் திலும், மனக் கஷ்டத்திலும் ஈடுபடச் செய்தி ருக்கின்றன. ஆரம்பக்கல்வி அபிவிருத்தியானது ஒரு டணிதமான விஷயம். எய்டெட் பாடசாலை களின் மூலமாகத்தான் நமது நாட்டில் குறைந்த செலவில் பொதுஜனக் கல்வியைப் பரப்ப முடி யும் ஏனெனில், இந்த எய்டெட் பாடசாலைகள் ஒரு பக்கம் பொதுமக்களுக்கும் மற்றொருபுறம் அரசாங்கத்திற்கும் எல்லா வகையிலும் திருப்தி செய்ய கடமைப்பட்டிருக்கின்றது. இல்லை யேல் இப் பாடசாலைகள் நம் நாட்டில் வேரூன்றி நிற்க முடியாது.

## ஜில்லாக் கல்விச் சபைகள்

தற்போது சிலர் கல்விச் சபைகளை முழுதும் கலைத்து வேறொரு சபை ஏற்படுத்த வேண்டு மென்கிறார்கள். இன்னும் சிலர் இச் சபையை யே சீர்திருத்த வேண்டுமென்று சொல்லிவரு கின்றார்கள். இது விஷயமாக கல்வி மந்திரி யவர்களும் இச் சபைகள் சரியாக வேலைசெய்ய வில்லை யெனவும் இதை சரியான முறையில் சீர்திருத்தவேண்டுமென்றும் யோசித்து வருவ தாக சில பத்திரிகைகளில் அறிக்கைகள் காணப்பட்டன. இதைப்பற்றி எய்டெட் பாட சாலை மானேஜர்களிடத்திலும், ஆசிரியர்களி டத்திலும், ஒரு கிளர்ச்சியும், பரபரப்பும், திகைப்பும் ஏற்பட்டிருக்கிறது. உண்மைக் கூறுமிடத்து இது காரணமாகத்தான் டிசம் பரில் நடக்கவேண்டிய இம்மகா நாடானது அதி அவசரத்தில் கூட்டப்பட்டது. இக் கல்விச் சபைகள் ஆரம்பக் கல்விச் சட்டத்தின்படி செய்ய வேண்டிய பல அரியவேலைகளைச்செய்ய வில்லை யென் [illegible] நான் ஒத்துக[illegible]ளுகின் றேன்.

சீர்திருத்துவதேயொழிய முற்றும் புறக்கணிக்கப்படுவதல்ல. ஒரு சமயம் இக் கல்விச் சபைகள் தெரிந்தோ, தெரியாமலோ எடுக்கப்படுமானால் தற்போதைய காங்கிரஸ் மந்திரிகள் ஒரு பெருத்த தவறு செய்ததாகும். சில வருஷங்களாக கல்விச் சபைகள் சரியான முறையில் வேலை செய்யவில்லையென்று குறை கூறினால் அது கல்விச் சபைகளின் தவறல்ல. கனம். டாக்டர் சுப்பராயன் மந்திரி அவர்கள் காலத்திற்குப் பிறகு திரு. குமாரசாமி ரெட்டியார் கல்விச் சபையின் முழு அதிகாரத்தையும் ஒடுக்கி 1935-ம் வருஷம் கல்விச் சபைகள் செய்யும் எத்தகைய தீர்மானங்களிலும் டைரக்டர் ரத்து செய்யலாமென்று ஒரு புது அதிகாரத்தை டைரக்டருக்குக் கொடுத்தார். அது முதல் க்ஷீணித்து வருகின்றன. சுதந்திரம் வேண்டுமென்று மக்கள் போராடும் இக்காலத்தில் திரு. ரெட்டியார் செய்தது மிகவும் தவறான காரியம். இப்பொழுது கல்விச் சபைகளில், கல்வி யதிகாரிகள் ஒரு புறமும், கல்விச் சபைகளின் அங்கத்தினர்கள் ஒரு புறமும், சண்டை சச்சரவுகள் தான் நடந்துவருகின்றன. பொது மக்களிடத்தில் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியை ஒப்படைக்கவேண்டு மென்பது ஆரம்பக் கல்விச் சட்டத்தை ஏற்படுத்திய அறிஞர்களின் நோக்கமாகும். இக் கல்விச் சபைகளை ஒழிப்பதற்கு கல்வி அதிகாரிகள் முனைந்து வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்கள் அவ்விதம் செய்வது இயற்கைக்கு விரோதமானதல்ல.

ஆரம்பக் கல்வி முன்னேற்றத்திற்குக் கல்வியதிகாரிகளைக் காட்டிலும் நமக்கு அதிக ஊக்கமுண்டு. நாம் ஆரம்பப் பாடசாலைகளினால் ஜீவிக்கப்படுபவர்களாகிய நாம் நம்முடைய கடமைகளை அறியாதவர்களா? இன்று நம்மிடத்திலிருக்கும் சிறு பிள்ளைகள் நாளை தேசீய வீரர்களாக விளங்குபவர்களென்பதை நாம் அறியாதவர்களா? இச் சிறு குழந்தைகளின் மனதை நல்ல வழியில் திருத்தவேண்டியது, நமக்கு கடவுளாலளிக்கப்பட்ட பெரிய வேலை யென்பதை நாம் அறியாதவர்களா? நாம் செய்யும்படியான தொழில் பண வகையில் லாபகரமாகவில்லாவிடினும் ஒரு பெரிய தெய்வீகமும், கௌரவமும், பெருந்தன்மையும் வாய்ந்தது ஆசிரியர்களின் தொழிலென்பதை நாம் அறியாதவர்களா? இவ்விதம் நாம் கூறும்பொழுது நாமெல்லாம் பரிசுத்தர்களென்று கூற முன்வரவில்லை. எல்லா இடங்களிலும் எல்லோரிடத்திலும் குற்றங் குறைகளிருந்தே தான் தீரும். நம்மிடத்தில் பெருங்குறைகளிருப்பதாகக் கல்வி யதிகாரிகள் புகார் சொல்லி வருகிறார்கள். அவ்விதக்குற்றங்களை நீக்க இது வரையில் கல்வி யதிகாரிகள் என்ன சீர்திருத்தம் செய்திருக்கின்றார்கள். ஆசிரிய மானேஜர்களிடத்திலுள்ள சிற்சில குற்றங்கள் அறவே நீங்கவேண்டுமானால் முதல் நம்முடைய பொருளாதார நிலைமை அரசாங்கத்தாரால் உயர்த்தப்படவேண்டும். முதலாவதாக கல்வியதிகாரிகள் எய்டெட் பாடசாலைகளைக் கண்டால் தாழ்ந்த அபிப்பிராயமும் அதிருப்தியையும், சந்தேகத்தையும், கொள்ளும் குணத்தை அறவே விட்டொழிக்கவேண்டும். ஆசிரிய மானேஜர்களுக்கும், கல்வி யதிகாரிகளுக்கும் ஒத்துழைப்பும் சிநேக பாவனையும் சகோதரத்துவமும் வளர்ந்து வருதல் வேண்டும். இவைகளுக்கெல்லாம் மருந்து நான் முந்திய சொல்லியபடி கல்வி முறையைச் சீர்திருத்தப்படவேண்டும். ஆரம்பக் கல்வியானது எய்டெட் பாடசாலைகளிடத்தில் ஒப்புவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் தாய் தந்தையர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அரசாங்கத்தினருக்கும் பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்படும். ஜில்லாக் கல்விச் சபைகள் பொது ஆட்சி முறையில் சீர்திருத்தப்படவேண்டும். தற்போது இக் கல்விச் சபைகளில் ஜில்லாபோர்டு, முனிஸிபாலிடி, ரோமன், கத்தோலிக் சபைகள், பிராட்டஸ்டெண்ட்சபைகள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்களின் சங்கங்கள், இவைகளின் பிரதிநிதிகள் அடங்கியிருக்கின்றன. இத்துடன் அரசாங்கத்தார் சிலரை நியமித்திருக்கின்றனர். நான் கூறும் சீர்திருத்தத்தின்படி ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயத் இவைகள், பாடசாலைகள் பரிபாலிக்கும் பொறுப்பை விட்டுவிடவேண்டும். இவைகளுக்குக் கல்விச் சபைகளில் பிரதி



நிதித்வம் வேண்டியதில்லை. தற்போது கல்விச் சபைகளிலுள்ள ஜில்லா கல்வியதிகாரி, கலெக்டர் இவர்களுக்குப் பதிலாக ஒவ்வொரு கல்விச் சபைக்கும் சமிஷனர் போன்ற ஒரு அதிகாரியைக் கல்வி மந்திரியார் ஏற்படுத்துதல் வேண்டும். இக் கல்விச் சபையில் கத்தோலிக் பாடசாலைகள், பிராட்டஸ்டெண்ட் பாடசாலைகள் இவைகளுக்கு ஒவ்வொரு பிரதி நிதித்துவமும் அந்த ஜில்லாவிலுள்ள எய்டெட் பாடசாலைகளைக் கணக்கிட்டு நூற்றுக்கு ஒரு ஆசிரிய மானேஜர்கள் பிரதி நிதித்வமும், மானேஜர்கள் பிரதி நிதித்வமும் கொடுக்கப்படல்வேண்டும். அவ்விதம் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த தொகையினர்களில் நான்கிலொரு பங்கு சட்டசபை அங்கத்தினர்களையோ, முனிசிபல் அங்கத்தினர்களையோ, ஜில்லா போர்டு அங்கத்தினர்களையோ, தாழ்த்தப்பட்ட அங்கத்தினர்களையோ, மகம்மதிய அங்கத்தினர்களையோ அரசாங்கத்தார் நியமிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு நூறு பாடசாலைகளுக்கும் ஒரு கல்விச் சபை அங்கத்தினரை அடிக்கடி அப்பாடசாலையை பார்வையிடச் செய்யவேண்டும். இக் கல்விச் சபைத்தலைவர், உபதலைவர், காரியதரிசி, உபகாரியதரிசி, ஐந்து நிர்வாக அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் காரியதரிசியே அக் கல்விச் சபையை நிர்வகிக்க முக்கிய உத்தியோகஸ்தராவர். இவ்வுத்தியோகஸ்தரைக் கல்வி மந்திரியார் அங்கீகரிக்கப்படவேண்டும். இந் நிர்வாகக் கமிட்டியின் வேலை பாடசாலைகளை நிர்வகிப்பதும் எய்டெட் பாடசாலைகளுக்குக் கிராண்டு கொடுப்பதும் ஆகும். கல்வி வரியும் அந்தந்த ஜில்லாக் கல்விச் சபைக்கு ஒப்படைக்கவேண்டும். பணம் குறைவு படுமளவிற்கு அரசாங்கத்தார் ஈடுசெய்தல்வேண்டும். இத்தகைய முறையில் ஆரம்பக் கல்வி முறையானது சீர்திருத்தப்படுமானால் குறைந்த சிலவில் திறமையான முறையில் சீக்கிரத்தில் நமது நாட்டில் பொதுஜனக் கல்வி பரவும். அதைவிட்டு ஜனநாயக ஆட்சி முறையிலுள்ள கல்விச் சபைகளை எடுத்துவிடுவது ஒரு பெரிய தவறாகும். தற்போது கிராண்ட்டு கொடுக்கும் விஷயத்தில் ஏற்பட்டுள்ள திறமையுள்ள பாடசாலையென்றும், திறமையற்ற பாடசாலையென்றும் பிள்ளைகளின் சங்கியைக்கொண்டு தீர்மானிக்கப்படும் ஆபாசமான சட்டத்தை உடனே சீர்திருத்தவேண்டும். ஒரு பாடசாலையின் படிப்பைக்கொண்டு திறமையை தீர்மானிக்கவேண்டுமேயொழிய பிள்ளைகளின் சங்கியைக் கொண்டுத் தீர்மானிப்பது தவறாகும்.

## பிள்ளைகளின் தேர்ச்சியின் பேரில் கிராண்டு கொடுக்கப்படவேண்டும்.

நான் முன்பு சொல்லியது போல இடைக்கால மந்திரிகள் காலத்தில் விடுத்துள்ள அரசாங்க அறிக்கையானது அநேக குறைகளையடைந்துள்ளது. 5 வகுப்புகளில்லாத பாடசாலைகளையும், ஒரு உபாத்தியாயரால் நடத்தப்படும் பாடசாலைகளையும், எடுத்துவிட வேண்டுமென்பது சரியான முறையல்ல. தற்போது நமது ராஜதானியிலுள்ள சுமார் 65 லக்ஷம் பாடசாலைகளுக்குப் போகும் வயதுடைய பிள்ளைகளில் சுமார் 35 லக்ஷம் பிள்ளைகளே வாசித்து வருகின்றார்கள். முதல் முதலில் எல்லா பாடசாலைகளுக்குப் போகும் வயதுடைய பிள்ளைகளைப் பாடசாலைக்குப் போகும்படி திட்டத்தை ஏற்படுத்தவேண்டியது இப்புதிய மந்திரிகளின் கடமையாகும். அதைவிட்டு சுமார் 40,000 பாடசாலைகளை 5-வது வகுப்பு வரையில்லாத காரணத்தினால் எடுத்துவிடப்படுமானால் தற்போது பாடசாலைகளிலுள்ள பிள்ளைகள் 30 லக்ஷத்திலிருந்து 10 லக்ஷத்திற்கு குறைந்து விடுமென்பதற்கு சந்தேகமில்லை. இந்த 40000 பாடசாலைகளும் மக்களின் பாமரத்தன்மையை ஒழிக்க உழைக்கவில்லை யென்பது தவறான அபிப்பிராயமாகும். உண்மைக் கூறுமிடத்து இப்பாடசாலைகளின் திறமையைக் கொண்டு பரீக்ஷை செய்து (Result Grant system) கிராண்டுகள் கொடுக்கப்படுமானால் இப்பாடசாலைகள் உபயோகமுள்ளவைகளா உபயோகமற்றவைகளா என்பது நன்கு தெரியும். அத்தகைய திறமையைப் பார்த்துக் கிராண்ட்டு கொடுக்கும் முறையை மறுபடியும் அரசாங்கத்தார் கொண்டுவருவார்களென்று நம்புகின்றேன்.

## அதிக கிராமப் பள்ளிக் கூடங்கள் வேண்டும்.

ஜில்லாக் கல்விச் சபைகளின் உதவியால் பாடசாலைகளில்லாத ஆயிரக்கணக்கான சிறு கிராமங்களில் முதல் பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டும். அவ்விதம் பாடசாலைகளை வைக்க ஏற்படுமாயின் இன்னும் சுமார் 60000 பாடசாலைகள் வைக்கப்படவேண்டும். அப்பொழுது ஆயிரக்கணக்காக படித்து வேலையில்லாமல் திண்டாடும் வாலிபர்களுக்கு வேலை கிடைக்க ஒரு வழியேற்படும். ஆரம்பப் பாடசாலைகளுக்கு எடுத்ததும் முதலில் எல்லா ஆசிரியர்களும்

போதனா முறை பயிலவேண்டுமென்பது அவசியமில்லை. அநேகமாக நல்ல உபாத்தியாயர்கள் பிறப்பளவில் ஏற்படுகின்றார்களே யொழிய செயற்கை யளவில் ஏற்படவில்லை. உண்மையாக உபாத்திமைத் தொழில் செய்யவேண்டுமென்ற நோக்க முடையவர்களல்லாது மற்றவர்களை போதனா முறைக்கு அனுப்புவது பிரயோஜனமில்லை. அவ்விதம் போதிக்கவேண்டுமென்கிற எண்ணமுடைய ஆசிரியர்களை போதனா முறைப் பாடசாலைகளுக்கு அனுப்பித்தானாகவேண்டுமென்பதும் அவசியமில்லை. தற்போதுள்ள போதனாமுறையிலுள்ள பாடசாலைகள் ஆசிரியர்களுக்கு முற்றும் பயனற்றவை. பொது மக்களின் பணம் இவைகளுக்கு அநாவசியமாக செலவழிக்கப்படுகின்றன. இப்பாடசாலைகள் எடுத்துவிடப்படுமானால் பொது மக்களின் பணம் சுமார் 6 லக்ஷம் ரூபாய் மிச்சப்படுத்தப்படும். இதற்குப் பதிலாக ஒவ்வொரு ரேஞ்சுகளிலும் போதனா முறை பயிற்சியற்ற ஆசிரியர்களை ஒன்று கூட்டி 6 மாதத்திற்கொருமுறை 2 வாரமோ 4 வாரமோ கல்வி யதிகாரிகளைக்கொண்டு முக்கிய போதனாமுறைகளைக் கற்பித்து அவர்களுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்து போதனா முறை பயின்ற ஆசிரியராக எடுத்துக் கொள்ளப்படவேண்டும். சாதாரணமாக ஆரம்பப்பாடசாலைகள் ஆசிரியர்களுக்கு ஏராளமான போதனாமுறைப் பயிற்சி வேண்டியதில்லை. சிற்சில போதனா முறை பயிற்சிகளே போதுமானது.

இன்னும் ஒரே ஒரு வார்த்தைக் கடைசியாகச் சொல்லவிரும்புகின்றேன்: அதாவது ஆரம்பக் கல்வி யபிவிருத்திக்கு முக்கியமானவர்கள் ஆசிரிய மானேஜர்கள். நாம் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அநுபவத்தை யொட்டியுள்ளன, நம்முடைய வார்த்தைகளைப் புறக்கணித்து கல்வி யதிகாரிகளின் போதனைகளுக்கு செவிசாய்க்கக் கூடாதென்று கனம் காங்கிரஸ் கல்வி மந்திரியவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். சகோதரர்களே நாம் மனம் தளர்ச்சியடையாமல் நம்முடைய குறைகளை பகிரங்கமாக எடுத்துரைப்போமாக. நாம் செய்து வரும்புனிதமானத் தொழிலுக்கு அவசியம் கடவுள் நம்மைக் கைதூக்கிவிடுவார். நாம் மாத்திரம் ஒற்றுமையுடனும் உற்சாகத்துடனும் தியாகபுத்தியுடனும் தைரியமாக நம்முடைய குறைகள் நீங்கும் வரையில் உழைத்து வருவோமாக. நம் குறைகள் நீங்கி ஜெயம் கிடைக்கும் வரையில் ஆரம்பக் கல்வி நம் நாட்டில் சீக்கிரம் பரவவேண்டுமென்ற பெருத்த நோக்கத்துடன் உழைத்து வருவோமாக.

190351

Printed at the Association Press, & Published by P. Veeraraghavan,
94/95 New Street, G. T. Madras.